S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ,
ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 353 15.06.2026 MONDAY VAIKASI : 32 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 353 15.06.2026 திங்கள்கிழமை வைகாசி : 32 விலை : ரூ.5/–

## புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிப்பது என்பது இந்தியாவின் மரபணுவிலேயே இருக்கிறது

# "பிரதமர் மோடி பெருமிதம்"



## 60 நாட்களுக்கு பின்னர் கடலுக்கு புறப்பட்ட மண்டபம், ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள்

ராமேசுவரம்: ஜூன்.15-

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மற்றும் ராமேசுவரத்தில் 60 நாட்களுக்கு பின்னர் பாக் நீரிணை கடற்பகுதியில் மீன்பிடிக்க விசைப்படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.

தமிழகத்தின் வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் பாக்ஜலசந்தி கடற்பகுதிகளில் ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களை மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரிகளின் இனப்பெருக்க காலமாக, மத்திய மீன்வளத்துறை அமைச்சகம் கண்டறிந்துள்ளது.

மீன் வளத்தை பெருக்கும் நோக்கத்தில், இந்த கால கட்டத்தில் இந்த ஆண்டு ஏப்ல் 15 முதல் ஜூன் 14 வரையிலும் இரண்டு மாத காலங்கள் விசைப்படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டது.

மீன்பிடித் தடைக்காலத்தை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் ராமேசுவரத்திலிருந்து எஸ்.பி பட்டிணம் வரையிலும் பாக் ஜலசந்தி கடலிலும், தனுஷ்கோடியிலிருந்து கன்னிராஜபுரம் வரையிலும் மன்னார் வளைகுடா கடலிலும் ஐம்பதுக்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் 1500க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் கடற்கரை பகுதிகளில் நங்கூரமிடப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

தடைக்காலத்தை பயன்படுத்தி மீனவர்கள் விசைப்படகுகளை மராமத்து பணிகளை மேற்கொள்ளப் பயன்படுத்திக் கொண்டனர். ஞாயிற்றுக்கிழமை ஜூன் 14ம் தேதியுடன் மீன்பிடி தடைக்காலம் முடிந்ததால், ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் மற்றும் ராமேசுவரத்திலிருந்து சுமார் 800 விசைப்படகுகளில் நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் 60 நாட்களுக்கு பின் ஞாயிற்றுக்கிழமை மாலையிலிருந்து கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். விசைப்படகுகளில் ஐஸ்கட்டிகள், மீன்பிடி வலைகள் உள்ளிட்ட உபகரணங்கள் ஏற்றிக் கொண்டு, மகிழ்ச்சியுடன் மீனவர்கள் விசைப்படகுகள் பாக் நீரிணை கடலை நோக்கி சென்றனர். சுமார் இரண்டு மாத இடைவெளிக்குப் பிறகு மண்டபம் மீன்பிடி துறைமுகம் பரபரப்பாக காணப்பட்டது.

ராமநாதபுரம் மீன்வளத்துறை சார்பாக விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது: விசைப்படகு மீனவர்கள் அனுமதி டோக்கன் பெற்றே செல்ல வேண்டும். மீறினால் படகுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் மீனவர்கள் அடையாள அட்டை, ஆதார் அட்டை நகலை கண்டிப்பாக எடுத்துச் செல்ல வேண்டும். எல்லை தாண்டி மீன்பிடிக்க செல்லக்கூடாது.

பாதுகாப்பு உபகரணங்களை எடுத்துச் செல்ல வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லி, ஜூன்.15-

கடந்த 2014ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று பிரதமர் மோடி பிரதமர் ஆனார். இப்போது 3வது முறையாக பதவியில் நீடித்து வருகிறார். அவரது அரசு 12 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.இந்த 12 ஆண்டு காலத்தில் அவர் பல்வேறு உலகநாடுகளுக்கு சென்று வந்துள்ளார். சமீபத்தில் ஐக்கிய அரபு குடியரசு, ஹாலந்து, சுவீடன், நார்வே, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு சென்று வந்தார்.

மீண்டும் வெளிநாட்டு பயணம்

இந்த நிலையில் அவர் மீண்டும் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டு உள்ளார். இந்த முறை ஐரோப்பிய கண்டத்தில் உள்ள பிரான்ஸ் மற்றும் சுலோவாக்கியா நாடுகளுக்கு செல்கிறார். இதனையடுத்து அவர் நேற்று சிறப்பு விமானம் மூலம் புறப்பட்டு சென்றார். பிரான்சில் உள்ள நீஸ் விமான நிலையத்தை மோடி நேற்று இரவு சென்றடைந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் பிரதமர் மோடி தான் தங்கும் ஓட்டலுக்கும் சென்றார். அங்கு அவரை இந்திய வம்சாவளியினர் உற்சாகமாக வரவேற்றனர்.

இந்தநிலையில், பிரான்ஸ் சென்றடைந்த பிரதமர் மோடியை அந்நாட்டுப் பிரதமர் இமானுவேல் மேக்ரான் ஆரத்தழுவி வரவேற்றார். 'பாரத் இன்னொவேட்ஸ்' என்ற தலைப்பில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்றுள்ளார்.

'பாரத் இன்னொவேட்ஸ்'



மாநாட்டில் பிரதமர் மோடி பேசுகையில்,

இந்தியாவின் பாதுகாப்புத் துறையும் புத்தாக்கத்திற்காகத் திறக்கப்பட்டுள்ளது. இன்று, பாதுகாப்பு மற்றும் விண்வெளி தொடர்பான நூற்றுக்கணக்கான புத்தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் அற்புதமான பணிகளைச் செய்து வருகின்றன. சமீபத்தில், இந்தியாவின் அணுசக்தித் துறையிலும் முக்கிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவின் மரபணு

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, இந்தியா தனது அறிவாலும் புத்தாக்கத்தாலும் உலகிற்குப் புதிய திசையைக் காட்டியுள்ளது. கணிதம் முதல் வானியல் வரை, மருத்துவம் முதல் யோகா வரை, இந்தியாவின் பங்களிப்பே ஒட்டுமொத்த மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமைந்துள்ளது. இன்று, இந்தப் பாரம்பரியத்திற்கு நாம் ஒரு புதிய வேகத்தையும் புதிய திசையையும் அளித்துள்ளோம். புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிப்பது என்பது இந்தியாவின் மரபணுவிலேயே இருக்கிறது.

மத்திய கிழக்கு பதிகளில் நிலவும் மோதல்கள் மற்றும் பருவநிலை மாற்றம் அதிகரித்து வரும் தாக்கங்களுக்கு மத்தியில், உலகம் முன்னெப்போதும் இல்லாத பெரும் மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. ஆனால் இன்று, மனிதகுலத்தின் முன் சவால்கள் இருந்தாலும், அளவற்ற வாய்ப்புகளும் உள்ளன. செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கணினி, உயிரித் தொழில்நுட்பம், விண்வெளித் தொழில்நுட்பங்கள் மற்றும் மேம்பட்ட பொருட்கள் ஆகியவை மனிதகுலத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் தொழில்நுட்பங்களாகும். இவையே மனித நாகரிகத்தின் அடுத்த அத்தியாயங்கள். ஒவ்வொரு தொழில்நுட்பப் புரட்சியும் மனிதகுலத்திற்கு ஒரு புதிய வாய்ப்பை அளிக்கிறது, மேலும் ஒவ்வொரு வாய்ப்பும் ஒரு புதிய பொறுப்பையும் கொண்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

மாநாட்டை முடித்துக்கொண்டு நீஸ் நகரில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மெக்ரானுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்துகிறார். இதில் இரு தரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது, வர்த்தகம், பொருளாதாரம், பாதுகாப்பு, முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்து ஆலோசனை நடத்துகிறார்கள்.

பின்னர் பிரதமர் மோடி பிரான்சில் இருந்து 2 நாள் பயணமாக சுலோவாக்கியவுக்கு செல்கிறார். அங்கு அந்நாட்டு அதிபர் பீட்டர் பெல்லெகிரினி, பிரதமர் ராபர்ட்பிகோ ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார். அதன்பின் மீண்டும் பிரான்சுக்கு திரும்பும் மோடி 16,17 ம் தேதிகளில் எவியன் நகரில் நடைபெறும் ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

18ம் தேதி பிரான்ஸ் தலைநகர் பாரீசுக்கு செல்லும் பிரதமர் மோடி அங்கும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார். இந்த பேச்சுவார்த்தைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிறது.

## புதிய ராணுவ தளபதியாக தீரஜ் சேத் நியமனம்

புதுடெல்லி, ஜூன்.15-

ராணுவத்தின் அடுத்த தளபதியாக லெப்டினன்ட் ஜெனரல் தீரத் சேத் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் ஜூன் 30ம் தேதி பதவி ஏற்றுக்கொள்கிறார்.

ராணுவத் தளபதியாக இருக்கும் ஜெனரல் உபேந்திர திவிவேதி இம்மாத இறுதியில் ஓய்வு பெறுகிறார். இதைடுத்து ராணுவ துணைத் தளபதியாக இருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் தீரஜ் சேத்தை புதிய தளபதியாக மத்திய அரசு நியமித்துள்ளது.



ராணுவத்தில் சுமார் 40 ஆண்டு காலமாக பணியில் இருக்கும் தீரஜ் சேத், பல பிரிவுகளில் உயர் அதிகாரியாக பணியாற்றியவர். இவர் கடந்த 1986ம் ஆண்டு ராணுவத்தின் பீரங்கி படைப்பிரிவில் அதிகாரியாக சேர்ந்தார். காஷ்மீரில் தீவிரவாத ஒழிப்பு பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

லெப்டினன்ட் ஜெனராலாக பதவி உயர்வு பெற்ற பின் இவர், ராணுவத்தின் வான் பாதுகாப்பு பிரிவான சுதர்ஸன சக்கர படைப் பிரிவுக்கு தலைமை தாங்கினார். தென்மேற்கு மற்றும் தென் மண்டலங்களிலும் இவர் தலைமை அதிகாரியாக பணியாற்றியுள்ளார்.

அங்கோலா நாட்டில் ஐ.நா படை அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். பிரான்ஸின் பாரீஸில் இவர் ராணுவ உயர் அதிகாரி பயிற்சியில் பங்கேற்றுள்ளார்.

## ஆட்சியை பிடிக்க நினைத்தது யார்? மு.க.ஸ்டாலினுக்கு அமைச்சர் செங்கோட்டையன் கேள்வி

**கோவை, ஜூன்.15–**

அதிமுக கட்சியில் இருந்து தவெகவில் அடுத்தடுத்து பலர் இணைந்து வருவது குறித்து அதிமுக தலைமை மட்டுமல்லாது திமுகவை சேர்ந்தவர்களும் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். அதிமுகவை தீர்ந்துபோன சக்தி என சொல்லிவிட்டு அந்த தீர்ந்துபோன சக்தியில் இருந்து ஆள் பிடிக்கும் வேலையில் தவெக செய்து வருவதாக திமுகவை சேர்ந்தவர்கள் விமர்சனம் செய்து வருகின்றனர். குறிப்பாக திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் நேற்று பேசுகையில் தவெகவை கடுமையாக விமர்சனம் செய்திருந்தார்.

தீர்ந்துபோன சக்தி என சொல்லிவிட்டு அந்த கட்சியில் இருந்தே ஆட்களை வாங்கி வருகின்றனர். அப்படியென்றால் நீங்கள் அந்தளவுக்கு காய்ந்துபோன சக்தியாக இருக்கின்றீர்களா என விமர்சித்தார் ஸ்டாலின்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக கோவையில் அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

யாரை தீர்ந்துபோன சக்தி என சொல்கின்றார் ? ஸ்டாலின் அதிகமாக பேசக்கூடாது. மக்களால் நிராகரிக்கப்பட்ட முதல் அமைச்சர் அவர். அவர் இதுபோல கருத்து சொல்லி விமர்சனம் செய்வதை காட்டிலும் தன் கட்சியை எப்படி வளர்ப்பது என்பது குறித்து யோசித்து செயல்பட்டால் நல்லது.

தமிழ்நாடு மக்கள் நம் முதல்அமைச்சர் விஜய் தான் நாட்டை ஆளவேண்டும் என முடிவெடுத்து வாக்களித்து இருக்கின்றனர். ஆள் பிடிக்கின்ற நிலை எங்களுக்கு இல்லை. திமுக ஆட்சி நடைபெறும்போது பலர் அக்கட்சியில் சேர்ந்தார்கள். அதற்கு பெயர் என்ன ? மேலும் தேர்தல் முடிவுகள் வந்த பிறகு பெரும்பான்மை பலம் எங்களிடம் இருந்தபோது திமுகவும் அதிமுகவும் இணைந்து ஆட்சியை பிடிக்க நினைத்தார்களே ? அதற்கு பெயர் என்ன ? அதனை முறியடித்தவர் முதல்அமைச்சர் விஜய். இவ்வாறு அவர் கூறினார்.

## ஒட்டன்சத்திரத்தில் அமமுக மாவட்ட செயலாளர் தலைமையில் 2000 பேர் தவெக வில் இணைந்தனர் ஒட்டன்சத்திரத்தில் தவெக நிர்வாகி டாக்டர். எம்.முத்து சிறப்பான வரவேற்பு

ஒட்டன்சத்திரம், ஜூன்.15-

அம்மா மக்கள் முன்னேற்ற கழக திண்டுக்கல் மாவட்ட செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான கே.பி.நல்லசாமி தலைமையில் 2000க்கும் மேற்பட்டோர் தமிழக வருவாய்த்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்.

இவர்களை வரவேற்கும் விதமாக ஒட்டன்சத்திரத்தில் தமிழக வெற்றிக்கழக நிர்வாகி டாக்டர். எம்.முத்து தலைமையில் 500க்கும் மேற்பட்டோர் ஒட்டன்சத்திரம் தாராபுரம் ரவுண்டான சாலையில் வெடி வைத்து வானவேடிக்கையுடன் பேரணியாக தொடங்கி பஸ் நிலையம் வழியாக அலுவலகம் வந்தடைந்தனர். தமிழக வெற்றிக்கழகத்தில் இணைந்த கே.பி.நல்லுசாமிக்கு டாக்டர்எம்.முத்து தலைமையில் கிரேன் மூலம் ராட்சத பூ மாலை அணிவிக்கப்பட்டு கௌரவித்து பாராட்டி வரவேற்கப்பட்டது. இதில் தமிழக வெற்றி கழகம் நிர்வாகிகள் டாக்டர். எம்.முத்து ஜோதி முத்து, ஆர்.ஆர். பேக்கரி ராஜ்கமல், விஜய், சண்முகவேல் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது





தமிழக வெற்றி கழக நிர்வாகி டாக்டர்.எம். முத்து ஆதரவற்றோர் ஏழை எளியோருக்கு சீருடை மற்றும் உணவு மாதந்தோறும் வழங்கி வருகிறார் மேலும் மாணவ மாணவிகளுக்கு கல்வி நிதி உதவி மற்றும் உபகரணங்கள் வழங்கி வருவதோடு பொதுமக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் மருத்துவ முகாம்களையும் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# சென்னை மாவட்டத்தில் மாணவர், மாணவியர்கள் விடுதிகளில் தங்கிப் பயல விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

## மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

சென்னை, ஜூன்.15–

சென்னை மாவட்டத்தில் பிற்படுத்தப் பட்டோர், மிகப்பிற்படுத் தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர் மற்றும் மாணவியர்கள் விடுதி களில் தங்கிப் பயல விண்ணப் பங்கள் வரவேற்கப்படுகின்றன என சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு அரசால் சென்னை மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத் தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கென 12 அரசு கல்லூரி மாணவர் விடுதி மற்றும் 6 அரசு கல்லூரி மாணவியர் விடுதிகள் ஆக மொத்தம் 18 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன.

பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு, ஐடிஐ மற்றும் பாலிடெக்னிக் படிப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர் சேரத் தகுதியுடையவர்கள் ஆவர். விடுதிகளில் எவ்வித செலவினமும் இல்லாமல் பின்வரும் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அனைத்து விடுதி மாணவ/மாணவியருக்கு மூன்று வேளை உணவு மற்றும் தங்கும் வசதியும் அளிக்கப்படும். கல்லூரி விடுதிகளில் முதலாம் ஆண்டு தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்கு ஜமக்காளம் வழங்கப்படும். விடுதிகளில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ/மாணவ யிர்களுக்கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைபோர்வைகள் வழங்கப்படும்

பெற்றோர், பாது காவலரது ஆண்டு வருமானம் ரூ. 2,00,000/க்கு மிகாமல் இருக்க வேண்டும்

இருப்பிடத்திலிருந்து பயிலும் கல்வி நிலையத்தின் தொலைவு குறைந்தபட்சம் 8 கி.மீக்கு மேல் இருக்க வேண்டும். இந்த தூர விதி மாணவியருக்கு பொருந்தாது. தகுதியுடைய மாணவ/மாணவியர் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட விடுதிகாப் பாளர்/காப்பாளினிகளிடமிருந்தோ அல்லது மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட பிற்படுத்தப் படோர் நல அலுவலகத் திலிருந்தோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சம்பந்தப் பட்ட விடுதிகாப்பாளர், காப்பாளினிகள் அல்லது மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் 15.07.2026க்குள் நல அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மாணவ/மாணவியர்கள் விண்ணப்பிக்கும் பொழுது சாதி மற்றும் பெற்றோரது ஆண்டு வருமானம் குறித்த சான்றிதழ்கள் ஏதும் அளிக்கத் தேவையில்லை. விடுதியில் சேரும் போதுமட்டும் இச்சான்றிதழ்களை அளித்தால் போதுமானது.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கென தனியே 5 இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே கல்லூரி மாணவ/மாணவியர்கள் அரசின் இச்சலுகைகளை பெற்று, பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

# புதுச்சேரி சட்டப்பேரவை கூடுவது எப்போது? முதல்வர் ரங்கசாமி பதில்

புதுச்சேரி, ஜூன்.15–

மீன்பிடி தடைக் காலம் முடிந்து கடலுக்கு மீனவர்கள் புறப் பட்டதையடுத்து அவர்களை வழியனுப்பி வைத்தபோது, புதுச்சேரி சட்டப் பேரவை எப்போதும் கூடும் என்ற கேள்விக்கு முதல்வர் ரங்கசாமி பதிலளித்தார்.



மத்திய அரசின் உத்தரவுப்படி இந்த ஆண்டுக்கான மீன்பிடி தடைக்காலம் கடந்த ஏப்ரல் 15ம் தேதி தொடங்கியது. புதுச் சேரியில் கனகசெட்டிகுளம் முதல் மூர்த்திக்குப்பம் வரையிலும், காரைக்காலில் மண்டபத்தூர் முதல் வாஞ்சூர் வரையிலும் உள்ள அனைத்து மீனவ கிராமங்களிலும் படகுகள் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டன.

தடை காலத்தை பயன்படுத்தி மீனவர்கள் தங்கள் படகுகள், வலைகளை சீரமைத்து பராமரிப்பு பணிகளை மேற்கொண்டனர். 60 நாட்கள் தடைக்காலம் இன்று ஞாயிற்றுக் கிழமை யுடன் முடிவடைந்ததை தொடர்ந்து, தேங்காய்திட்டு துறைமுகத்தில் ஆழ்கடல் மீன்பிடிக்கச் செல்லும் 144 விசைப்படகுகளை தயார் செய்யும் பணி மும்மரமாக நடைபெற்றது.

இங்கு 120 படகுகளில் 80க்கும் மேற்பட்ட படகுகள் இன்று கடலுக்குச் சென்றன. மற்ற படகுகள் அடுத்தடுத்த நாட்களில் கடலுக்குச் செல்லும் எனக் கூறப்படுகிறது.

மீனவர்கள் தங்கள் படகுகளில் போதிய அளவு ஐஸ்கட்டிகள், டீசலை ஏற்றி, நீண்ட நாட்களுக்கு பின் கடலுக்குச் செல்ல தயாராகினர். இதனைத் தொடர்ந்து தேங்காய்திட்டு மீன்பிடி துறைமுகத்தில் மீனவர்கள் கடலுக்குச் செல்லும் பணிகள் நடந்தது.

மீனவர்கள் புனித நீரை கடலில் ஊற்றியும், மலர் தூவியும் பூஜை செய்தும் வழிபட்டனர். தொடர்ந்து முதல்வர் ரங்கசாமி விசை படகுகளுக்கு மலர் தூவி கொடியசைத்து மீனவர்களை தொழிலுக்கு வழியனுப்பி வைத்தார்.

அதையடுத்து செய்தியாளர் களிடம் முதல்வர் ரங்கசாமி கூறுகையில்," வருகிற 17ம் தேதி அமைச்சரவை விரிவாக்கம் நடை பெறும். அமைச்சர்கள் பதவி யேற்றவுடன் புதுச்சேரி சட்டப்பேரவை எப்போது கூடும் என தெரிவிக்கப் படும். சட்டப்பேரவையை கூட்ட ஆகஸ்ட் வரை காலமுள்ளது. கூட்டணிக் கட்சிகளுடன் கலந்து ஆலோசித்து நியமன எம்எல்ஏக்கள் பதவி குறித்து முடிவு எடுப்போம்" என்றார்.

# மின் பகிர்மான அமைப்பில் தொழில்நுட்ப சவால்கள்: மின்வாரிய தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் விளக்கம்

சென்னை, ஜூன்.15–

வட்டத்தில் பொன்னேரி அருகே உள்ள மேலூர், பஞ்செட்டி ஆகிய 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் மற்றும் இருளிப்பட்டுவில் உள்ள 33 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் என, 3 துணை மின் நிலையங்களில் நேற்று தமிழ்நாடு மின்வாரிய தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் ஆய்வு மேற்கொண்டார்.

துணை மின் நிலையங்களின் செயல் பாடு, பராமரிப்பு பணிகள், மின் தடையின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்ட அவர், தடையற்ற மின்சாரம் வழங்குதல், பழுதுகளை விரை வாகக் கண்டறிந்து சரி செய்தல் மற்றும் நுகர்வோர் சேவை வழங்கலை மேம்படுத்துதல் ஆகியவை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்கினார்.

பஞ்செட்டி 110 கிலோ வோல்ட் துணை மின்நிலைய வளாகத்தில் ரூ.256.45 கோடி மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் 230/110 கிலோ வோல்ட் துணை மின் நிலைய கட்டுமானப் பணியின் இறுதிக் கட்டப் பணிகளை ஆய்வு செய்தார். பிறகு, அலமாதி துணை மின் நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட அவர், பாடியநல்லூர் பகுதியில் புதைவட கேபிள் பழுது நீக்கும் பணி, ஆவடி துணை மின் நிலையத்தை ரூ.102 கோடி மதிப்பீட் டில் 230/110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாக தரம் உயர்த்தும் பணி ஆகிய வற்றை பார்வையிட்டு, பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, பஞ்செட்டியில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது: பஞ்செட்டி 230/110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்கும் பணியில் 95 சதவீதம் முடிவுற்றுள்ளது. மீதமுள்ள பணிகளை விரைந்து முடித்து, இன்னும் ஓரிரு மாதங் களில் துணை மின் நிலையம் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும். இந்த துணை மின் நிலையத்தின் பணிகள் நிறைவடைந்ததும், கும்மிடிப்பூண்டி சிப்காட், தேர்வாய் கண்டிகை, சோத்துப் பெரும்பேடு, பஞ்செட்டி, பொன்னேரி, மேலூர், அலமாதி மற்றும் பெரிய பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள பல்வேறு 110 கிலோ வோல்ட் துணை நிலையங்களுக்கு மின்சாரம் வழங்கப்படும்.

தற்போது கோடை காலம் என்பதால், இரவு நேரங்களில் மின் பயன்பாடு அதிகரிப்பதால், மின் பகிர்மான அமைப்பில் சில தொழில்நுட்பச் சவால்கள் ஏற்படுகின்றன. சென்னையில் 38 லட்சம் மின் நுகர்வோர் உள்ளனர். இவ்வளவு பெரிய வலையமைப்பில் சில பகுதிகளில் மின் மாற்றிகள் மற்றும் துணை மின் நிலையங்கள் அதிக சுமையைச் சந்திப்பதால், ஃபியூஸ் பழுதடைதல், கேபிள் கோளாறுகள் மற்றும் பிற தொழில் நுட்பப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட பகுதிகளில் தற்காலிக மின் தடை நிகழ்கின்றன. ஆகவே, பிரச்சினைகள் உடனுக்குடன் சரி செய்யப்பட்டு மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.இவ்வாறு ராதா கிருஷ்ணன் தெரிவித்தார்.

# "த.வெ.க.,வினர் தற்குறிகள் இல்லை அம்புக்குறிகள்" ராகவா லாரன்ஸ்

சென்னை, ஜூன்.15–

"தவெக அரசின் ஒரு மாத கால செயல்பாடு மிகச் சிறப்பாக உள்ளது. புதிய அரசுக்கு கொஞ்சம் கால அவகாசம் கொடுக்க வேண்டும். இந்த ஆட்சியின் மீது சிலர் கடுமையான விமர்சனங்களை முன் வைக்க பொறாமைதான் காரணம். தவெகவினரை தற்குறிகள் என விமர்சனம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் தற்குறிகள் இல்லை அம்புக்குறிகள்" என நடிகர் ராகவா லாரன்ஸ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தி யாளர்களை சந்தித்த நடிகர் ராகவா லாரன்ஸ், " அரசியலுக்கு வரலாமா, வேண்டாமா எனக் கேட்டு சமீபத்தில் ஒரு வீடியோ வெளி யிட்டிருந்தேன். அதற்கு பதிலளித் துள்ளவர்கள், சின்னக் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை என்னை அரசியலுக்கு வருமாறு உரிமையோடு அழைக்கின்றனர். நான் ஒரு முடிவை எடுத்துள்ளேன். விரைவில் என் ரசிகர்களை அழைத்து, மேடையில் என் தாயை அமரவைத்து, அந்த நல்ல முடிவை அறிவிக்க உள்ளேன்.

திருநங்கைகள் என்னைப் பார்க்க வந்துள்ளதாக சொன்னார்கள், ஆனால் இவ்வளவு பேர் இங்கே வந்துள்ளா ர்கள். நீங்கள் நினைத்தது நடக்கப் போகிறது. மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. இதனால் தான் அரசியலுக்கு வரலாமா என மக்களிடம் கேட்டேன். அதில் என்ன தவறு. நான் இனி ஏதாவது பெரிய முடிவு எடுத்தால் மக்களிடம் கேட்டுத்தான் செயல்படுவேன்.

தவெக அரசின் ஒரு மாத கால செயல்பாடு மிகச் சிறப்பாக உள்ளது. கோயில்கள், பள்ளிகள் அருகில் இருந்த மதுக்கடைகளை மூடும் முடிவு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. கல்வித்துறை அமைச்சர், அறநிலையத்துறை அமைச்சரின் செயல் பாடுகள் நன்றாக உள்ளது. புதிய அரசுக்கு கொஞ்சம் கால அவகாசம் கொடுக்க வேண்டும்.



புது இடத்தில், ஒரு வாடகை வீட்டுக்குச் சென்றாலே அங்கு பழக ஒரு மாதம் ஆகும். அந்த வீட்டில் எது பிரச்சினை, அந்தத் தெருவில் உள்ள நாய்களை எப்படி நமக்குப் பழக்கப்படுத்துவது என்பதை தெரிந்து கொள்ளவே காலநேரம் தேவை.

ஒரு நாய்க்கோ, ஒரு வாடகை வீட்டுக்கோ நேரம் தேவை என்றால், புதிதாக ஆட்சிக்கு வந்தவர்களுக்கும் கால அவகாசம் கொடுப்பது நல்லது என நான் நினைக்கிறேன். இந்த ஆட்சி மீது சிலர் கடுமையான விமர்சனங்களை முன் வைக்க பொறாமைதான் காரணம். விமர்சனங்களை வைப்பதற்கு முன்பு, நாம் என்ன செய்தோம் என்று யோசனை செய்துவிட்டு விமர்சனம் வைத்தால் நன்றாக இருக்கும்.

திருச்சி கிழக்கில் போட்டியிடுகிறேனா என்பதை விரைவில் ரசிகர்கள் முன்பு அறி விப்பேன். எல்லா கட்சிகளின் தலைவர்களும் எனக்கு நண்பர்கள் தான். அவர்களின் ஆசியை பெற்றே என் முடிவை அறிவிப்பேன்.

ரஜினியின் ஆசிர்வாதம் இல்லாமல் நான் எதையும் செய்வதில்லை. அவரின் ஆசியோடுதான் எல்லாவற்றையும் செய்வேன்.

அண்ணாமலை நன்றாக படித்தவர், அரசியல் புரிதல் உள்ளவர். அவரைப் போன்ற புதியவர்கள் அரசியலுக்கு வருவது நல்லதுதான்.

தவெகவினரை தற்குறி என விமர்சனம் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் தற்குறி இல்லை அம்புக்குறிகள். அவர்கள் கண்ணை மூடித் திறப்பதற்குள் தவெகவை வெற்றிபெற வைத்துவிட்டார்கள். மக்களுக்கு யார் நல்லவர்கள் கெட்டவர்கள் எனத் தெரியும். நான் மக்களுக்கு உண்மையாக இருப்பேன்.

நான் பணம் சம்பாதிக்கவோ, வெறுப்பு அரசியல் செய்யவோ அரசியலுக்கு வரமாட்டேன். இப்போது நூறு பேருக்கு உதவி செய்தால், அரசியலுக்கு வந்தால் லட்சம் பேருக்கு உதவி செய்வேன். பணம் முக்கியமில்லை, மனிதன் எப்படி வாழ்ந்தான், எப்படி மறைந்தான் என்பதே முக்கியம். நான் மறையும்போது இந்த ஊரே அழும்" என்றார்.

# மாதாந்திர மின் கட்டண முறையை அரசு செயல்படுத்த வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.15–

பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை: மின்சார தமிழகத்தில் தற்போது வீட்டு மின்சார நுகர்வோருக்கு 2 மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.



இந்த நடைமுறை பல ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வந்தாலும், தற்போதைய பொருளாதார சூழல், மக்களின் வாழ்வியல் தேவைகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களை கருத்தில் கொண்டு மின்கட்டண வசூல் முறையைமாதத்துக்கு ஒரு முறை என்ற அடிப்படையில் மாற்றுவது காலத்தின் தேவையாக உள்ளது.

புதிதாக பொறுப் பேற்றுள்ள தமிழக அரசு 200 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த திட்டத்தின் முழுப் பயனும் பொதுமக்களை சென்றடைய வேண்டுமெனில், மின் கணக்கெடுப்பு மற்றும் கட்டண வசூல் முறையிலும் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாதாந்திர மின் கட்டண முறையால் பொதுமக்கள் ஒரே நேரத்தில் அதிக தொகை செலுத்த வேண்டிய அவசியம் இருக்காது. குடும்பங்களின் மாதாந்திர நிதி திட்டமிடல் எளிதாகும். மின் பயன்பாட்டை கண்காணித்து சிக்கனமாக பயன்படுத்த மக்கள் ஊக்க மடைவார்கள். மீட்டர் கணக்கெடுப்பில் ஏற்படும் தவறுகள் குறையும். மின் வாரியத்தின் வருவாய் வசூல் சீராக நடைபெறும். நிலுவை தொகை மற்றும் அபராதம் செலுத்தும் நுகர்வோர் எண்ணிக்கை குறையும். 200 யூனிட் இலவச மின்சாரத் திட்டத்தின் பயன் தெளிவாக கணக்கிடப்படும்.

எனவே, தமிழக மக்களின் நீண்ட கால கோரிக்கையை ஏற்று, மின்வாரிய நிர்வாகத்தை மேலும் வெளிப்படையாகவும் தமிழக அரசு உடனடியாக மாதத்துக்கு ஒரு முறை மின் கணக்கெடுப்பு முறையை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அ.தி.மு.க.,விலிருந்து விலகுவதாக நடிகை கவுதமி அறிவிப்பு

சென்னை, ஜூன்.15–

அதிமுக கொள்கை பரப்பு துணைச் செயலாளராக பொறுப்பு வகித்த நடிகை கவுதமி, அக்கட்சியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து எடப்பாடி பழனிசாமிக்கு கவுதமி எழுதியுள்ள கடிதத்தில், "நேற்று (14/06/2026) முதல் நான் வகித்து வரும் அஇஅதிமுக அடிப்படை உறுப்பினர் பதவி மற்றும் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பதவியில் இருந்தும் தற்போது உள்ள அரசியல் சூழல் கருத்தில் கொண்டு, நான் சமூக சேவை செய்ய ஏதுவான வகையில் கனத்த இதயத்துடன் என்னை விடுவித்துக் கொள்கிறேன்.



கழகத்தில் சேர்ந்த நாள் முதல் நேற்று வரை எனக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய முன்னாள் அமைச்சர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் பிற அணி மாநில செயலாளர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள்,பகுதி கழக செயலாளர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், பேரூர் நகரக் கழக செயலாளர்களையும் மனதார வணங்கி நன்றி கூறி என்னை கழகத்திலிருந்து விடுவித்துக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

கவுதமி அதிமுகவுக்கு வருவதற்கு முன்னதாக பாஜகவில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உள்ளாட்சித் தேர்தலுக்குத் தயாராகும் தவெக: வலையில் சிக்கும் அதிமுகவின் முக்கிய நிர்வாகிகள்; பல்வேறு கட்சியினரும் படையெடுப்பதால் பனையூரில் புஸ்ஸி ஆனந்த் ரொம்ப 'பிஸி'

சென்னை, ஜூன்.15–

உள்ளாட்சித் தேர்தலில் தனிப் பெரும்பான்மை பலத்துடன் மகுடம் சூட தவெக அதிரடி வியூகம் வகுத்து வருகிறது. அதற் கேற்ப, மற்ற கட்சிகளில் செல்வாக்குடன் இருக் கும் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத் தலை வர்களைத் தன் பக்கம் இழுக்க 'வலை' வீசி வரு கிறது. பெரும்பாலும் இந்த வலையில் அதிமுகவினர் தான் சிக்கி வருகின்றனர்.



தவெக ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தமிழக அரசியலில் அடுத்தடுத்து அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்து வரு கின்றன. ஆளும் தரப் பின் அசுர வளர்ச்சியைக் கண்டு அதிமுக, திமுக உள்ளிட்டஎதிர்க்கட்சிகளி லிருந்து முன்னாள் அமைச் சர்கள், முன்னாள் எம் எல்ஏக்கள்மற்றும் மாவட் டச் செயலாளர்கள் என முக்கியப் புள்ளிகள் தங் கள் ஆதரவாளர்களு டன் தவெக நோக்கிப் படையெடுத்து வருகின் றனர்.

அந்தவகையில், ஏற் கெனவே, அதிமுக முன் னாள் அமைச்சர்கள் வெல் லமண்டி நடராஜன், கடம் பூர் ராஜூ, எம்.சி.சம்பத், உடுமலை ராதாகிருஷ்ணன், எம்.ஆர். சிவபதி உள் ளிட்டோர் தவெகவில் இணைந்தனர். நேற் றும், அதிமுக முன்னாள் அமைச்சர் பச்சைமால், வடசென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் பாலகங்கா, முன்னாள் எம் .பி. வனரோஜா, முன்னாள் நெல்லை மேயர் புவனேஸ் வரி, முன்னாள் எம்.எல் .ஏ. விஜயதரணி உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் தவெகவில் இணைந்தனர்.

இந்தத் திடீர் அணித் தாவல்கள், தமிழகத்தின் பாரம்பரியக் கட்சிகளின் அடித்தளத்தையே அசைத் துப் பார்த்துள்ளன. சட்டப் பேரவைத் தேர்தலில் கூட் டணி ஆதரவுடன் ஆட்சி யைப் பிடித்தாலும், அடுத்த தாக நடைபெறவுள்ள உள் ளாட்சித் தேர்தலில் 'தனிப் பெரும்பான்மை' பலத் துடன் வெற்றிக்கொடியை நாட்ட வேண்டும் என்ப தில் தவெக தலைமை உறு தியாக உள்ளது.

இதற்காக இப்போதே தேர்தல் பணிகளை முடுக் கிவிட்டுள்ள தவெக, மற்ற கட்சிகளில் செல்வாக் குடன் இருக்கும் இரண் டாம் மற்றும் மூன்றாம் கட் டத் தலைவர்களைத் தன் பக்கம் இழுக்க 'வலை' வீசி வருகிறது. பெரும்பாலும் இந்த வலையில் அதிமுக வினர்தான் சிக்கி வருகின் றனர்.

சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் மற்ற கட்சிகளின் அதிருப்தி நிர் வாகிகளைக் குறிவைத்து 'ரகசிய ஆபரேஷன்' தீவிரமடைந்துள்ளது. அடிமட்டத் தொண்டர் களுடன் நேரடித் தொடர் பில் உள்ள உள்ளூர் செல்வாக்கு மிக்க நபர் களை வளைப்பதன் மூலம், தேர்தலை மிக எளிதாக எதிர்கொள்ள முடியும் என தவெக வியூகம் வகுத்துள் ளது.

அந்தவகையில், பல முன்னணித்தலைவர் களுடன் ரகசியப் பேச்சு வார்த்தைகள் நடந்து வரு வதாகக் கூறப்படுகிறது. பனையூரில் இதுதொடர் பான நடவடிக்கைகளில் கட்சியின் பொதுச் செய லாளர் புஸ்ஸி ஆனந்த் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள் ளார்.

நகரப் பகுதிகளைத் தவிர்த்து, கிராமப்புறங் களில் முற்றிலும் மாறு பட்ட ஒரு உத்தியைத் தவெக கையில் எடுத் துள்ளது. அங்கு கொள் கைகளை விட மக்களின் அன்றாடத் தேவைகளான குடிநீர், சாலை வசதி, தெரு விளக்கு மற்றும் வேலை வாய்ப்பு உறுதித் திட் டம் போன்றவற்றில் நில வும் குறைகளைச் சுட்டிக் காட்டி, 'சமூகத் தணிக் கை' என்ற பெயரில் களப் பணியைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

இந்த அதிரடி நகர் வுகள் மூலம் உள்ளாட் சித் தேர்தலில் பெரும் பாலான இடங்களைச் சொந்த பலத்தில் கைப் பற்றி, தவெக ஒரு தவிர்க்க முடியாத சக்தி என்பதை மீண்டும் நிரூபிக்க அக்கட் சித்தலைமை மும்முரமாகச் செயல்பட்டு வருவதாக தகவல் வெளியாகி உள் ளது.

இதுகுறித்து தவெக வட்டாரத்தில் விசாரித்த போது, "அதிகாரத்தின் அடித்தளமான உள்ளாட்சி அமைப்புகளைக் கைப்பற் றினால் மட்டுமே, மாநில அளவிலான இலக்கை நோக்கிய பயணத்தைச் செம்மையாக முன் னெடுக்க முடியும் என்ப தில் தவெக உறுதியாக உள் ளது. குறிப்பாக, சென்னை மாநகராட்சியின் 200 வார் டுகளிலும் மக்கள் செல் வாக்கு மிக்க, நன்கு அறி முகமான நபர்களை வேட் பாளர்களாக நிறுத்த கட் சித் தலைமை திட்டமிட் டுள்ளது.

இதற்காக, பிற கட் சிகளில் உள்ள முக்கியப் புள்ளிகள் மற்றும் தேர் தல் பணிகளில் அனுபவம் வாய்ந்த அதிருப்தி நிர்வாகி கள், உள்ளூர் செல்வாக்கு மிக்க நபர்களை தவெக பக்கம் ஈர்க்கும் முயற் சிகள் தீவிரமடைந்துள் ளன. கிராமப்புறங்களில் ஏற்கெனவே தேர்தலில் போட்டியிட்டு நூலிழை யில் வாய்ப்பை இழந்தவர் கள் மற்றும் கட்சிகளால் ஓரம் கட்டப்பட்ட நிர்வாகி களுக்கு வலைவீசப்பட்டுள் ளது" என்று தெரிவித்தனர்.

அந்தவகையில், தவெக வுக்கு இருக்கும் 35 சதவீத வாக்கு வங்கியை, உள் ளாட்சி தேர்தலில் முழு மையாக பயன்படுத்தி, பிரதான கட்சிகளை 'வாஷ் அவுட்'செய்யும் முயற்சியில் தவெக மும்முரமாக ஈடு பட்டு வருகிறது.

கட்சியில் 234 மாவட்டங்கள் உருவாக்க திட்டம்

தற்போது தவெக, கட்சி ரீதியாக 132 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 132 மாவட்டச் செயலாளர்கள் உள்ளனர். இந்நிலையில், கட்சியின் கட்டமைப்பை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், தொகுதி அடிப்படையில் 234 கட்சி மாவட்டங்களை உருவாக்கி, மொத்தம் 234 மாவட்டச் செயலாளர்களை நியமிக்க தவெக தலைமை திட்டமிட்டுள்ளது.

நியமனங்கள் படிப் படியாக நடைபெறும் என்று கூறப்படுகிறது. அதிக ஆதரவாளர்களுடன் மாற்றுக் கட்சிகளில் இருந்து புதிதாக வந்து இணைந்தவர்களுக்கு மாவட்டச் செயலாளர் பதவிவழங்க திட்ட மிட்டுள்ளது. அதேபோல, சில எம்எல்ஏக்களுக்கும் மாவட்டச் செயலாளர் பொறுப்பு வழங்கப்பட உள்ளது.

தேர்தலில் போட்டி யிட வாய்ப்பு கிடைக்காத மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தேர்தலில் தோல்வியைத் தழுவிய வேட்பாளர்களுக்கு வாரியத் தலைவர் உள்ளிட்ட முக்கிய அரசுப் பொறுப்புகளை வழங்கவும் தவெக தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. பிரதான கட்சியான திமுகவில் 78 மாவட்டங்களும், அதிமுகவில் 82 மாவட்டங்களும் உள்ளன. விசிகவில் ஏற்கெனவே 234 மாவட்டங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்படுகிறதா? சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு பரிசீலனை

சென்னை, ஜூன்.15–

காஞ்சி மாவட்டம் பரந்தூரில் அமையவிருந்த சென்னைக்கான 2வது சர்வதேச விமான நிலையத் திட்டப் பணிகள், தவெக ஆட்சிப் பொறுப்பேற்றதை தொடர்ந்து, நிலப் பத்திரப் பதிவு உள்ளிட்ட பூர்வாங்க பணிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பரந்தூர் விமான நிலையம் வருவதற்கான சாத்தியக் கூறுகள் பெருமளவு குறைந்துள்ள நிலையில், ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் சிப்காட் தொழிற் பூங்கா அமைப்பது குறித்து பரிசீலிக்கும்படி அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

பரந்தூர் பகுதியில் விமான நிலையம் வரும் என்று நம்பி ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் கோடிக்கணக்கில் முதலீடு செய்தன. பலர் நிலத்தை வாங்கி குவித்ததால் கடந்த ஓரிரு ஆண்டுகளில் நிலங்களின் மதிப்பு 10 மடங்கு உயர்ந்த நிலையில், தற்போது இந்த ரியல் எஸ்டேட் வணிகம் கடும் சரிவைச் சந்திக்கத் தொடங்கியுள்ளது.

முந்தைய ஆட்சியின் போது, பரந்தூர் பசுமை வழி விமான நிலையத் திட்டத்துக்காக 5,746 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டது. அதில் முதற்கட்டமாக, ஏறத்தாழ 1,700 ஏக்கர் நிலம் நில உரிமையாளர்களின் சம்மதத்துடன் நேரடியாகக் கையகப்படுத்தப்பட்டது.

தற்போது தமிழகத்தில் தவெக தலைமையிலான புதிய அரசு அமைந்துள்ளது. முன்னதாக, இந்த விமான நிலையத் திட்டத்தை எதிர்த்து முதல்வர் விஜய் போராட்டத்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், இத்திட்டம் தற்போது மறு பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே கையகப் படுத்தப்பட்ட 1,700 ஏக்கர் நிலத்தை மீண்டும் விவசாயிகளிடம் ஒப் படைப்பதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதால், அந்த நிலப் பரப்பில் புதிய சிப்காட் தொழிற் பூங்காவை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து அரசுத் தரப்பில் தீவிர மாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.




விமான நிலையம் வருவதற்கான சாத்தியக் கூறுகள் குறைந்துள்ள நிலையில், ஏகனாபுரம் மற்றும் சுற்று வட்டார கிராம மக்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு நிம்மதிப் பெரு மூச்சு விட்டுள்ளனர். இது குறித்துப் போராட்டக் குழுவினரிடம் கேட்டபோது, "தேர்தல் பிரச்சாரத்தின் போது, பரந்தூர் விமான நிலையத் திட்டம் கைவிடப்படும் என்று தற்போதைய முதல்வர் அறிவித்திருந்தார். தற்போது அவர் தலைமையிலான அரசு பொறுப் பேற்றுள்ளதால், இந்தத் திட்டம் நிச்சயமாக வராது என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டுள்ளது" என்றனர்.

பரந்தூரில் சர்வதேச விமான நிலையம் அமையும் என்ற அதிகாரப் பூர்வ அறிவிப்பு வெளியானவுடன். ஸ்ரீபெரும்புதூர், சுங்குவார் சத்திரம் மற்றும் பரந்தூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் நிலத்தின் மதிப்பு பல மடங்கு உயர்ந்தது. சென்னை மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனங்கள், எதிர்காலத்தில் பெரும் லாபம் பார்க்கலாம் என்ற நோக்கில், அங்குள்ள விளை நிலங்களையும் சுற்றியுள்ள இடங்களையும் போட்டிப் போட்டுக்கொண்டு வாங்கிக் குவித்தன.

ஆனால், இப்போது விமான நிலையம் வருவதற்கான வாய்ப்புகள் மங்கி, சிப்காட் தொழிற் பூங்கா வரக்கூடும் என்ற தகவல் பரவியதால், அப்பகுதியில் நிலத்தின் விலை வேகமாகச் சரியத் தொடங்கியுள்ளது. வாங்கிய நிலங்களை அவசரமாக விற்க முடியாமலும், புதிய வாடிக்கையாளர்கள் யாரும் நிலம் வாங்க முன் வராததாலும் இப்பகுதியில் ரியல் எஸ்டேட் வர்த்தகம் பெருமளவு முடங்கியுள்ளது.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு இரண்டாவது விமான நிலையம் அவசியம் என்று ஒரு தரப்பு நிபுணர்கள் வாதிட்டாலும், இந்தத் திட்டம் கைவிடப் படுவதற்கான வாய்ப்புகளே தற்போது அதிகமாக நிலவுவதால், இது தொடர்பான அதிகாரப் பூர்வ அரசாணை விரைவில் வெளியாகலாம் என அப்பகுதி மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர்.

# இரவு நேரத்தில் தொடர் மின்வெட்டு; திருவள்ளூரில் மக்கள் திடீர் சாலை மறியல் போராட்டம்

## 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு

திருவள்ளூர், ஜூன்.15–

இரவு நேர தொடர் மின்வெட்டு கண்டித்து திருவள்ளூர் திருத்தணி சாலையில் கிராம மக்கள் திடீர் மறியலில் ஈடுபட்டதால் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பும் பரபரப்பும் நிலவியது. திருவள்ளூர் அடுத்த சிறுவனூர் மற்றும் சிறுவனூர் கண்டிகை பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக் கின்றனர். இந்த பகுதிகளில் கடந்த 10 தினங்களாக இரவு நேரங்களில் தொடர் மின்வெட்டு ஏற்பட்டு வந்தது. இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொடர்ந்து 10 நாட்களுக்கும் மேலாக இந்த நிலை தொடர்கிறது.

இந்நிலையில் நேற்று இரவும் 1 மணி நேரத்திற்கு மேலாக மின்சாரம் வரவில்லை. இதனால் ஆத்திரமடைந்த அந்த பகுதியை இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் 100க்கும் மேற்பட்டோர் திருவள்ளூர் திருத்தணி தேசிய நெடுஞ்சாலையில் திரண்டனர். திடீரென சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். இதுகுறித்து தகவலறிந்ததும் திருவள்ளூர் தாலுகா போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து மறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது அவர்கள், மின்சாரத்தை உடனே சரி செய்தால்தான் சாலை மரியாதை கைவிடுவோம் என கூறினர்.



இதனை தொடர்ந்து போலீசார், மின்வாரிய ஊழியர்களை சம்பவ இடத்துக்கு வரவைத்து ஒரு மணி நேரத்திற்கு பிறகு மின்சாரம் சரி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது.

இதையடுத்து மறியலை கைவிட்டு அனைவரும் கலைந்து சென்றனர். தொடர் மின்வெட்டு காரணமாக திருவள்ளூர் திருத்தணி தேசிய நெடுஞ் சாலையில் மக்கள் மறியலில் ஈடுபட்ட சம்பவத்தால் 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பும், பரபரப்பும் நிலவியது.

# கும்பகோணத்தை தனி மாவட்டமாக விரைவில் முதல்வர் அறிவிப்பார்: வேளாண் அமைச்சர்

கும்பகோணம், ஜூன்.15–

தமிழக முதல்வர் கும்பகோணத்தை தனி மாவட்டமாக விரைவில் அறிவிப்பார் என வேளாண் அமைச்சர் வினோத் தெரிவித்தார்.

கும்பகோணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட வேளாண் துறை அமை ச்சர் வினோத் செய்தியாளர்களிடம் பேசுகையில், "2028ல் நடைபெற உள்ள மாசி மகாமக விழா தொடர்பாக அறநிலைத் துறை அமைச்சருடன் ஆலோசனை நடத்தி வருகின்றோம்.

இந்த விழாவுக்கு சுமார் 50 லட்சம் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பல்வேறு திட்டங்கள் தேவையான



வசதிகளை தற்போது தயாரித்து வருகிறோம்.

கும்பகோணத்தை தனி மாவட்டமாக அறிவிப்பதற்கான முயற்சி மேற்கொண்டு வருகிறோம். தமிழக முதல்வர் கும்பகோணத்தை தனி மாவட்டமாக விரைவில் அறிவிப்பார்.

நிறைவடையாத சுற்றுச்சாலையை குறித்து ஏராளமானோர் என்னிடம் மனு அளித்துள்ளனர். கடந்த ஆட்சி காலத்தில் என்னென்ன பிரச்சினை இருக்கின்றது என ஆய்வு மேற்கொள்ள அறிவித்துள்ளோம். மீதமுள்ள சுற்றுச்சாலை பகுதியும் விரைவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்," என்றார் அவர்.

# 'ராகிங் என்ஜாய்புல்' அமைச்சர் அருண்ராஜ் பேச்சால் சர்ச்சை

சேலம், ஜூன்.15–

சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி 31வது இளங்கலை மாணவர்களுக்கான மருத்துவப் பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அருண்ராஜ், 98 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி பேசியதாவது: மருத்துவம் ஒரு தொழிலாக மாறிவிட்டதை மறுக்க முடியாது. நீட் தேர்வு இருக்க கூடாது, ஒரே நாடு ஒரே தேர்தல் போன்றவற்றிற்கு எதிராகத்தான் இருக்கிறோம். ஆட்சிக்கு வருவதற்கு முன்பும், வந்தபிறகும் நீட் தேர்வை எதிர்க்கிறோம்.மருத்துவம்

ஆனாலும் மாணவர்கள் நீட் தேர்வுக்கான பயிற்சி மேற்கொள்வது அவசியமானது. அரசு மருத்துவமனைகள் தரமானதாக இல்லை என்பதை மறுக்க முடியாது. நான் சென்னை மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் படித்தேன். அந்த நாட்களை மறக்க முடியாது. ராகிங் அனுபவம் மகிழ்ச்சியாக இருக்கும். 1997 காலக்கட்டத்தில் அண்ணாமலை பல்கலைக்கழக மாணவர் நாவரசு கொலை செய்யப்பட்டபிறகு ராகிங்கை அரசு தடை செய்தது. உடனடியாக 90 சதவீதம் நின்றுவிட்டது. அதேநேரத்தில் ராகிங் என்ஜாய்புல்லா இருக்கும். சீனியர் மாணவர்கள், நமக்கொரு அடிமை கிடைத்து விட்டான் என நினைத்து, ரெக்கார்டு எழுத சொல்வார்கள், டிக்கெட் புக் செய்யச் சொல்வார்கள். சோப்பு வாங்கி வர சொல்வார்கள், ஓட்டலுக்கு சென்று சாப்பாடு வாங்கி வருமாறு கூறுவார்கள். அது ஒரு என்ஜாயாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார். அமைச்சரே ராகிங் காலக்கட்டங்கள் மகிழ்ச்சியாக இருந்தது என கூறியது பரபரப்பை ஏற்படுத்தியது.

# தமிழகம் முழுவதும் நடைபெற்ற தேசிய லோக் அதாலத்தில் ஒரே நாளில் 91,369 நிலுவை வழக்குகளுக்கு தீர்வு

சென்னை, ஜூன்.15–

தமிழகம் முழுவதும் நடைதில் 91,369 நிலுவை வழக்கு பெற்ற தேசிய லோக் அதாலத்களுக்கு ஒரே நாளில் தீர்வு காணப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.664.47 கோடி இழப்பீடாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நீண்ட கால வழக்குகளுக்கு விரைவாகவும், கட்டணமின்றியும் தீர்வு காணும் நோக்கில் மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு சார்பில் தேசிய லோக் அதாலத் தமிழகம் முழுவதும் நேற்று நடைபெற்றது. மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு தலைவரும். உயர் நீதி மன்ற தலைமை நீதிபதியுமான எஸ்.ஏ.தர்மாதிகாரி அறிவுறுத் தலின்படி நடத்தப்பட்ட இந்த லோக் அதாலத்தில் சென்னை உயர் நீதிமன்றத்தில் 5 அமர்வுகளும், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் 3 அமர்வுகளும் ஏற் படுத்தப்பட்டு நிலுவை வழக்குகள் விசாரிக்கப்பட்டன.

சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் பி.வேல் முருகன்,




பி.டி.ஆஷா, என்.செந்தில் குமார், ஜி.அருள் முருகன் மற்றும் முன்னாள் நீதிபதி பி.கோகுல் தாஸ் ஆகியோர் தலைமையிலும், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நீதிபதிகள் பி.பி.பாலாஜி, பி.வடமலை, பி.தனபால் ஆகியோரது தலை மையிலும் நிலுவை வழக்குகள் விசாரிக்கப் பட்டன. இதேபோல மாவட்ட மற்றும் தாலுகா அளவில் மொத்தம் 506 அமர்வுகள் ஏற்படுத் தப்பட்டு மொத்தம் 91,369 நிலுவை வழக்குகளுக்கு நேற்று ஒரே நாளில் தீர்வு காணப்பட்டன.

இதன் மூலம் மொத்தம் ரூ.664 கோடியே 47 லட்சத்து 21 ஆயிரத்து 308க்கான காசோலைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாக வழங்கப் பட்டன. மாநிலம் முழுவதும் நடைபெற்ற இந்த லோக்அதாலத் ஏற்பாடுகளை மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழு உறுப்பினர் செயலரும், மாவட்ட நீதிபதியுமான எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் அந்தந்த மாவட்ட நீதிபதிகள் செய்திருந்தனர்.

இதன் ஒரு பகுதியாக, சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் நடைபெற்ற லோக் அதாலத்தில், உயர் நீதிமன்ற நீதிபதியும் மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, தீர்வு காணப்பட்ட வழக்குகளில் பயனாளிகளுக்கு இழப்பீட்டு தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

# "மின்வெட்டை நீக்க போர்க்கால நடவடிக்கை தேவை" செந்தில் பாலாஜி

சென்னை, ஜூன்.15–

"இன்ஸ்டா இன்ஃப்ளுயன்ஸர்களுக்கு கண்டண்ட் கொடுக்கும் வேலையை செய்யாமல், நள்ளிரவில் போராடும் மக்களின் துயர் துடைக்க மின்வெட்டை நீக்க போர்க்கால நடவடிக்கை எடுக்க வேண்டும்" என முன்னாள் மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மாற்றத்தைத் தருகிறேன்" என்று சொல்லி மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்ற தவெக அரசு தனது ஒரு மாத கால ஆட்சியில் வாக்களித்த மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையே தந்திருக்கிறது. 6 மணி நேரம், 12 மணி நேரம் மின்வெட்டு என தாங்கமுடியாத துயரத்தில் நள்ளிரவிலும் பொதுமக்கள் நடுத் தெருவிற்கும், சாலைகளுக்கும் வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

"சாலை மறியல் இல்லாத இரவுகள் இல்லை" என்ற நிலை மாநிலத்தின் தலைநகரிலும், மற்ற பகுதிகளிலும் இந்த ஆட்சியின் நிர்வாக அவலத்தை வீதிக்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

"பதவியேற்றவுடன் மாற்றத்தைத் தருவேன்" என்ற பஞ்ச் டயலாக் பேசிய முதலமைச்சர் மவுனமாக இருக்கிறார். மின் வெட்டுக்குப் பதிலும் சொல்வதில்லை.

பத்திரிகையாளர்களையும் சந்திப்பது இல்லை. பொறுப்பாக பதில்சொல்ல வேண்டிய மின்துறை அமைச்சரோ தினம் ஒரு Conspiracy theory எழுதி அதை ஊடகங்களிடம் ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறார். தங்கள் நிர்வாகத் திறமையின்மையை மறைக்க "Fake Reels" போடுவது போல் தினமும் திசை திருப்பும் வேலையை மட்டும் செய்கிறார்.

"ஃபியூஸ் கேரியரை திருடுகிறார்கள்" என்று சொல்லி ஒரு சிசிடிவி கேமரா வீடியோவை பதிவிடுகிறார் அமைச்சர். பகலில் நடக்கும் திருட்டுக்கு இரவில் எப்படி மின் தடை ஏற்படுகிறது? என்று சாதாரண பாமரனுக்கும் கேள்வி எழும் என்பதை அமைச்சர் யோசிக்கவில்லையா? ஃபியூஸ் திருடு போனால் மொத்தமாக தானே மின்சாரம் போக வேண்டும்? விட்டுவிட்டு போவது எப்படி? பிரச்சினையைதீர்ப்பதற்குப் பதில் அமைச்சர் கதை அளக்கிறார்.

கஷ்டப்படும் மக்கள் காதில் பூ சுத்துகிறார். அடுத்து "ஹார்ட் டிஸ்க்குகள் மாயம்" என்றார்.காவல்துறையே விசாரித்து அப்படி காணாமல் போன "ஹார்ட் டிஸ்க்குகளில்" முக்கியத் தகவல்கள் ஏதும் இல்லை என்று கூறிவிட்டது. "ஹார்ட் டிஸ்க்" திருட்டுக்கும் "கரன்ட் கட்டுக்கும்" என்ன சம்பந்தம்? மூன்றாவதாக "மின்வாரியப் பணியாளர்கள் சதி செய்கிறார்கள்" எப்பொழுதும் அர்ப் பணிப்புடன் களத்தில் நிற்கும் தனது பணியாளர்கள் மீதே பழி போட்டார்.

மக்களும் குழந்தைகளும் துன்பத்தில் இருப்பதை ரசிக்க மின்துறை பணியாளர்கள் என்ன அவர்களின் தலைவர் போன்றவர்கள் என்று நினைக்கிறாரா அமைச்சர்? தன் கையாலாகத்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டகரன்ட் கட் காரணம் குறித்து இப்படியா கப்சா



விடுவது?

தவெக ஆட்சியில் ஏற்பட்டுள்ள மாற்றம்" மின்வெட்டால் பள்ளிக்கு விடுமுறை விடும்"அவலம் தான்! தங்கள் பயிர்கள் தண்ணீர் இன்றி காய்வதால் விவசாயிகள் போராடும் துயரம்தான்! பத்திரிக்கையாளர்களை பார்த்தவுடன் பவர் கட்குறித்து அமைச்சர் சொல்லும் காரணங்கள் எல்லாமே இந்த தவெக அரசு சீரான மின்சாரத்தை அளிக்க முடியாமல் திணருகிறது என்பதுதான்!

ஆனால் எதனால் மின்வெட்டு நடக்கிறது? என்பதுபற்றி அதிகாரிகளை வைத்து அமைச்சரோ, அமைச்சரை வைத்து முதலமைச்சரோ ஒரு ரிவ்யூ மீட்டிங்காவது நடத்தியிருக்கிறார்களா? இல்லை! எதுவுமே இல்லை! இதுவும் தவெக ஆட்சியில்நடத்துள்ள மாற்றம்தான்! ஒரே மாதத்தில் மின்வாரியத்தில் ஏற்பட்டுள்ள படுமோசமான நிர்வாக தோல்வி இந்த ஆட்சியின் மாற்றம்தான்!

தமிழ்நாட்டின் மின் தேவை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகிறது என்பது எந்த அரசும் உணர வேண்டிய உண்மை. அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப திறமையாக நிர்வகித்து மக்களை இன்னலுக்கு உட்படாமல் காப்பதுதான் ஆட்சியின் நிர்வாகத் திறமை. அதைத்தான் எங்கள் தலைவர் தலைமையிலானதிராவிட மாடல் அரசு செய்தது. புள்ளி விவரங்களுடன் சொல்ல வேண்டுமென்றால்,2021ல் அதிகபட்ச உச்சமாக 16,481 மெகாவாட் மின்சாரம் தேவைப்பட்டது. 2022ல் 17,196மெகாவாட், 2023ல் 18,053 மெகாவாட், 2024ல் 19,049, 2025ல் 20,148 மெகாவாட், 2026 ஏப்ரலில் 20,974 மெகாவாட் உச்சத்தைத் தொட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் மின் தேவை அதிகரித்தாலும், திராவிட மாடல் ஆட்சி இருந்தவரை சீரான மின்சாரத்தை பொதுமக்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

சென்னையைப் பொருத்தவரை கடந்த ஆண்டு மின்தேவை 4,663 மெகாவாட் உச்சத்தைத் தொட்டது. 2024ல் 4,769 மெகாவாட் உச்சத்தைத் தொட்டது. அப்படி இருந்தாலும் மின்வெட்டு எங்குமே நடக்கவில்லை. பொதுமக்கள் நள்ளிரவில் கைக்குழந்தைகளுடன், வயதானவர்களுடன், நோயாளிகளுடன் தெருவுக்கு வந்து போராடும் நிலை ஏற்படவில்லை. அது மட்டுமா? இந்தியாவிலேயே மிக குறைவான மின்வெட்டு கொண்ட மாநிலம் தமிழ்நாடு. வளர்ந்த நாடுகளுக்கு இணையான சேவையை வழங்குகிறது என்று ஒன்றிய அமைச்சரே தமிழ்நாட்டைப் பாராட்டினார்.

கடந்த 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கி தடையில்லா மின்சாரம் கொடுத்தோம். நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வருவதற்கு முன்பு வருவாய்க்கும், செலவினத்திற்கும் இடையே இருந்த இடைவெளியை 5000 கோடி ரூபாயாகக் குறைத்தது திராவிட மாடல் ஆட்சி.

எண்ணற்ற மின் உற்பத்திக்கான திட்டங்கள், துணை மின் நிலையம், மின் வழித்தடம், மின்மாற்றிகள் அமைத்தல் என பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 90,000 மின்மாற்றிகள் புதியதாகவும், பழுதடைந்த மின்மாற்றிகளை மாற்றியும் மின்வாரியத்தின் நிர்வாகம் சீரமைக்கப்பட்டது திராவிட மாடல் ஆட்சியில்தான்!

ஆகவே, நிர்வாகம் தெரியாமல் மற்றவர்கள் மீது பழி போடுவதற்கே "பத்திரிக்கையாளர் சந்திப்பை" பயன் படுத்துவதை மின்துறை அமைச்சர் கைவிட்டு, மின்வெட்டு பிரச்சனையை தீர்த்து பொதுமக்கள் இரவில் நிம்மதியாக உறங்க, பள்ளிக்கூடங்கள் மூடாமல் இருக்க, விவசாயிகள் வேதனைக் கண்ணீர் வடிக்காமல் இருக்க த.வெ.க அரசுஇனியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்ஸ்டா இன்ஃப்ளுயன் ஸர்களுக்கு கண்டண்ட் கொடுக்கும் வேலையை செய்யாமல், ரியலாக நிர்வாகம் செய்ய முயல வேண்டும். மு.க.ஸ்டாலின் சொன்னது போல "பலரை சில காலம் ஏமாற்றலாம்; சிலரைப் பல காலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது" என்பதை மின்வெட்டை தடுப்பது எப்படி எனத் தெரியாமல் தத்தளிக்கும் மின்துறை அமைச்சரும், இப்படியொரு திறமையற்ற அமைச்சரை நியமித்து மக்களை சொல்லொனாத் துயரத்திற்கு ஆளாக்கியிருக்கும் முதல்வரும் "ரீல்ஸை" மறந்து "ரியாலிட்டிக்கு" வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்," எனத் தெரிவித்துள்ளார்.

# தங்க காயின் தருவதாக ரூ.20 கோடி மோசடி; ராயபுரம் பெண் இன்ஸ்பெக்டர் சஸ்பெண்ட்

## வடக்கு மண்டல இணை ஆணையர் அதிரடி

சென்னை, ஜூன்.15–

தங்க காயின் தருவதாக ரூ.20 கோடி மோசடி செய்த வழக்கில், ராயபுரம் பெண் இன்ஸ்பெக்டரை சஸ்பெண்ட் செய்து வடக்கு மண்டல இணை ஆணையர் உத்திரவிட்டுள்ளார். இதுதொடர்பாக இன்ஸ்பெக்டரின் டிரைவர் கைது செய்யப்பட்டார். ராயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வந்தவர் ஷீலா மேரி. இவர், கடந்த 3 வருடத்திற்கு முன்பு திருவொற்றியூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் பணியாற்றினார். அப்போது இவர், விலை குறைவாக ஒரு கிராம் தங்கம் தருவதாக ஆசை வார்த்தை கூறி 100க்கும் மேற்பட்ட போலீசார் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடம் ரூ.20 கோடி வரை ஏமாற்றியுள்ளார். இந்த விவகாரம் காவல்துறையினர் மத்தியில் சலசலப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

இதுதொடர்பாக பல காவல்துறையினர் புகார் கொடுக்காமல் இருந்தனர். ஒரு சில காவல்துறையினர் கோடிக்கணக்கில் பணம் கொடுத்து ஏமாந்ததால், பொருளாதார குற்றப்பிரிவு அலுவலகத்தில் புகார்




அளித்தனர். புகாரின் அடிப்படையில், பெண் ஆய்வாளரின் கார் டிரைவர் பிரபு மணி என்பவரை குற்றப்பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர். இவர், கொடுங்கையூர் பகுதியில் அலுவலகம் வைத்துள்ளார். இவரை நம்பி பணம் கொடுத்து முதலில் தங்க காயின் வாங்கி உள்ளனர். ஆசை அதிகமானதால் தங்க காயின் வாங்க அதிகளவில் பணம் கொடுத்துள்ளனர். ஆனால், பிரபுமணி தங்க காயின் கொடுக்காமல் ஏமாற்றி வந்துள்ளார். ஒரு கட்டத்தில் அலுவலகத்தை மூடிவிட்டு தலைமறைவானார். தங்க காயின் திட்டத்தில் பல போலீஸ் குடும்பத்தினர் சேரவும், பிரபுமணிக்கு உடந்தையாகவும் பெண் ஆய்வாளர் ஷீலா மேரி இருந்துள்ளார். இதன் மூலம் அவருக்கு பிரபு மணி கமிஷன் கொடுத்துள்ளார். இந்த பணத்தில் பிரமாண்ட திருமண மண்டபம், கல்குவாரி ஆகியவற்றை வாங்கியதாக விசாரணையில் தெரியவந் துள்ளது.

இந்நிலையில் பிரபு மணிக்கு உடந்தையாக செயல்பட்டதாக பெண் ஆய்வாளர் ஷீலா மேரியிடம் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று ஆய்வாளரை கைது செய்ய இருப்பதாகவும் கூறப்பட்டது. இதனிடையே, சென்னை வடக்கு மண்டல இணை ஆணையர் மனோகரன் உத்தரவின் பேரில், நூற்றுக்கும் மேற்பட்ட போலீஸ் மற்றும் அவர்களது குடும்பத் தினரை ஏமாற்றிய வழக்கில் ராயபுரம் பெண் காவல் ஆய்வாளர் ஷீலா மேரி நேற்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.



# திருப்பூர் பார்க் ரோட்டில்டாடா தனிஷ்க் ஷோரூமின்கிளை விரிவாக்கம்

திருப்பூர், ஜூன்.15-
திருப்பூர் பார்க் ரோட்டில் உள்ள டாடா தனிஷ்க் ஷோரூம், 5 ஆயிரம் சதுர அடி பரப்பில் நவீன டிசைன் நகைகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது. புதிய ஷோரூமை டைட்டன் நகைப்பிரிவு பிராந்திய மேலாளர் சுபிஷ் சுதாகரன், பிசினஸ் மேலாளர் சந்திரசேகர் ஆகியோர் திறந்து வைத்தனர். ஷோரூம் நிர்வாக இயக்குனர் செல்வக்குமார் வரவேற்றார். அவரது குடும்பத்தினர் பிரமீளா, பூவாத்தாள் மற்றும் வாடிக்கையாளர்கள் குத்துவிளக்கேற்றினர். நிர்வாக இயக்குனர் செல்வக்குமார் கூறுகையில்,நாளை (14ம் தேதி) வரை வைரத்தின் மதிப்பு மற்றும் தங்க நகையின் செய்கூலியில் 20 சதவீதம் தள்ளுபடியும், தங்கத்திற்கு கிராமுக்கு 101 ரூபாய் சிறப்பு தள்ளுபடியும் வழங்கப்படும். பழைய நகைகளை மாற்றும் வசதியும், சேமிப்பு திட்டமும் உள்ளது என்றார். அதிகாரிகள் சுபிஷ் சுதாகரன், சந்திரசேகரன் ஆகியோர் கூறுகையில், பாரம்பரியம் மற்றும் நவீன டிசைன்கள் மூலம் வாடிக்கையாளர்களுடனான உறவை வலுவாக்கவே இந்த உலகத்தளவிலான மறு துவக்கம் செய்யப்பட்டுள்ளது என்றனர்.



■ மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் அவர்கள் மதுரை மாவட்டம்,காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் உள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.மதுரை கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.சோ.கார்த்திகேயன் அவர்கள் உடன் உள்ளார்.



■ மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் அவர்கள் மதுரை மாவட்டம், காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்புப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.ரூ.10.25 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் மையக் கட்டடம் புதுப்பித்தல், டிஜிட்டல் மற்றும் மல்டிமீடியா காட்சிக்கூடங்கள் அமைத்தல், திறந்தவெளிக் கலையரங்கம் சீரமைத்தல், சுற்றுலாப் பயணிகளுக்கான குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



■ மாண்புமிகு பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. ராஜ்மோகன் அவர்கள்மதுரை மாவட்டம், மாவட்ட கலை பண்பாட்டுத் துறை அலுவலக வளாகத்தில் நடைபெற்று வரும் குழந்தைகளுக்கான பரதநாட்டியம், கீபோர்ட் வாசிப்பு, சிலம்பம் மற்றும் ஓவியப் பயிற்சி வகுப்புகளை நேரில் பார்வையிட்டார்.கல்வியுடன் இணைந்து கலை, விளையாட்டு மற்றும் பண்பாட்டு திறன்களையும் வளர்த்துக் கொண்டு, ஒவ்வொருவரும் தனித்திறன் மிக்கவர்களாக உருவாக வேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும், இதுபோன்ற பயிற்சிகளில் தொடர்ந்து ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்ளுமாறும் குழந்தைகளைக் கேட்டுக் கொண்டார்.

# கடையநல்லூரில் பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக தவ்ஹீத் ஜமாத் சார்பில் கண்டன பேரணி

தென்காசி, ஜூன்.15-
சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக நடைபெறும் பாலியல் வன் கொடுமைகளைக் கண்டித்து, தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் தென்காசி மாவட்டம், கடையநல்லூர் அனைத்து கிளைகள் சார்பில் பிரம் மாண்ட கண்டன பேரணி நடைபெற்றது.
கடையநல்லூர் பேட்டை ஜலாலியா மண்டபம் அருகில் இருந்து தொடங்கிய இப்பேரணி, நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று மணிக்கூண்டு அருகில் நிறை வடைந்தது. இந்த கண்டன பேரணிக்கு தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் தென்காசி மாவட்டத் தலைவர் அப்துல் சலாம் தலைமை தாங்கினார். பேரணியில் திரளான பொது மக்களும் அமைப்பின் தோழர்களும் கலந்து கொண்டு பெண்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு எதிராகப் முழக்கங்களை எழுப்பினர். தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தின் ஜமாத்தின் மாநில மாநில துணை பொதுச்செயலாளர்





ஏ.கே. அப்துல் ரஹீம் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். அவர் தனது உரையில் நாட்டில் நடைபெறும் பாலியல் வன் கொடுமைகளில் பெரும்பான்மையான குற்றவாளிகள் அண்டை வீட்டாரராகவோ அல்லது உறவினர் களாகவோதான் இருக்கின்றனர். என் பதைப்புள்ளி விவரங்களுடன் சுட்டிக்காட்டிய அவர், மக்களிடையே குற்றவாளிகளை அடையாளம் காணும் விழிப்புணர்வு உடனடியாக உருவாக வேண்டும் என வலியுறுத்தினார். தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நடைபெறும் பாலியல் வன் கொடுமைகளைத்தடுக்க அரசு கடுமையான சட்டப்பி ரிவுகளை உருவாக்க வேண் டும். குற்றவாளிகளுக்குக் கடுமையான, முன்மாதிரி யான தண்டனைகளை விரைந்து வழங்க வேண்டும். இத்தகைய குற்றங்களுக்கு எதிராக எவ்வளவு தடைகள் வந்தாலும், தமிழ்நாடு தவ் ஹீத் ஜமாத் விழிப்புணர்வு பிரச்சாரங்களை மிகத் தீவிர மாகத் தொடர்ந்து முன்னெடுக்கும் எனவும் பெண்களிடையே ஒழுக்கமின்மையை விதைத்து, ஒட்டுமொத்த சமூகத்தையும் சீரழிக்கும் சினிமா கலாச்சாரத்தை முழுமையாக ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பெற்றோர்கள் தங்களது பெண் குழந்தைகளுக்கு 'தவறான தொடுதல்' (Bad Touch), 'நல்ல தொடுதல்' (Good Touc h) என்பதைச் சொல்லிக் கொடுப்பதோடு நின்றுவிடா மல், "அந்நிய ஆண்கள் தொடுவதே தவறு" என்ற தற்காப்பு உணர்வையும் விழிப் புணர்வையும் சிறு வயது முதலே ஊட்ட வேண்டும் எனவும் உரையாற்றினார் இப்பேரணியில் மாவட்டச் செயலாளர் ஜலாலுதீன், பொருளாளர் அன்வர் சாதிக், துணைச் செயலாளர்கள் ஹாஜா மைதீன், செய்யதலி, பீர் மைதீன், அப்துல் பாசித் முஹம்மது அலி பிலால், மருத்துவ அணி நிர்வாகி அப்துல்லாஹ். மாணவரணி செயலாளர் ரபீக் ராஜா மற் றும் வர்த்தக அணி நிர்வாகி இனாமுல் ஹக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.பேரணிக்கான ஏற்பாடு களை கடையநல்லூர் அனைத்து கிளை நிர்வாகி கள் நிர்ஞ்சர் ஒலி, சேகனா, முஹம்மது பாருக், செய்யது சுலைமான், பாதுஷா, சதாம், முஹம்மது இஸ்மாயில் ஆகியோருடன் இணைந்து மாவட்ட தொண்டரணி செயலாளர் ஷேக் தாவூத் தலைமையிலான தொண்டரணியினர் செய்திருந்தனர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் நடைபெற்ற திரௌபதி அம்மன் கோவில் திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் பூக்குழி இறங்கி நேர்த்திக்கடன் செலுத்தினர். சங்கரன்கோவிலில் உள்ள திரௌபதி அம்மன் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாதம் பூக்குழி திருவிழா நடைபெறுவது வழக்கம் தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறும் திருவிழா கடந்த மூன்றாம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. இதனை தொடர்ந்து பக்தர்கள் காப்பு கட்டி விரதம் இருந்தனர். விழா நாட்களில் திருக்கல்யாணம், சுவாமி அம்பாள் வீதி உலா, திருவிளக்கு பூஜை உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடைபெற்றன. இதை அடுத்து முக்கிய நிகழ்வாக பூக்குழி திருவிழா கோலாகலமாக நடைபெற்றது. இதில் 24 பெண்கள் உள்பட 197 பேர் பூக்குழி இறங்கி தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குருவிகுளம் ஒன்றிய அனைத்து துறை அதிகாரிகளோடு குருவிகுளம் ஒன்றிய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி பணிகள் குறித்தும் மக்களிடம் பெற்ற மனுக்கள் மீது நடவடிக்கைகள் குறித்தும் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் திலீபன் ஜெய்சங்கர் ஆலோசனை மேற்கொண்டார். அப்போது குருவிகுளம் ஒன்றிய கழக செயலாளர்கள் தேவராஜ், ரவிச்சந்திரன், ராமதுரை மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.




■ திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை பேரூராட்சியில் பேருந்து நிலையம் அருகில் WE THE LEADERS உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெற்றது . இதில் ஆறு செந்தில் ரா. ராதாகிருஷ்ணன் த. சேகர் ஆ.ராஜேந்திரன் நா. ஜெகதீசன் அ. சுடலை வடிவேல் ரா ராமச்சந்திரன் சிவசுப்பிரமணியன் i. பழனிவேல். M. கலைச்செல்வன் சு. ஆனந்து க முத்துகிருஷ்ணன். பெ கோபால் நா சந்தனகுமார் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்

# சென்னை தி.நகர் மேம்பாலத்தில் கார் விபத்து!

சென்னை, ஜூன்.15-
சென்னை தி.நகர் மேம்பாலத்தில் நங்கநல்லூர் பகுதியைச் சேர்ந்த திவ்யா கிருஷ்ணா என்பவர் எழும்பூர் மருத்துவமனைக்கு காரை ஓட்டிச் சென்றபோது, திடீரென டயர் வெடித்தது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த கார் சென்டர் மீடியனில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தால் தி.நகர் பகுதியில் சிறிது நேரம் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதுகுறித்து போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்



# திருப்பூர் சுவரன் மாறன் கல்வி அறக்கட்டளை சார்பாக ஓவிய போட்டி

திருப்பூர், ஜூன்.15-
பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் 1351 வது சதய விழாவை முன்னிட்டு திருப்பூர் மாவட்ட சுவரன் மாறன் கல்வி அறக்கட்டளை மற்றும் பிரகாஷ் கேலரி இணைந்து ஓவியப்போட்டி நடத்தப்பட்டது இந்த போட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டார்கள் இதில் 4 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் மார்பளவு படம் வரையப்பட்டது 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பேரரசர் பெரும்பிடுவது முத்தரையர் முழு உருவ படம் வரையப்பட்டது இதில் தலா மூன்று பரிசுகள் வழங்கப்பட்டது வந்திருந்த அனைத்து மாணவர்களுக்கும் மெடல் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது இந்த விழாவை சுவரன் மாறன் கல்வி அறக்கட்டளை சிறப்பாக நடத்தி முடித்தது இதில் அறக்கட்டளை நிர்வாகி டாக்டர் தர்மராஜ் மற்றும் எஸ் பி சங்கர் ஏ ஆர் பாண்டியம்பலம் வடிவேல் அனைவரும் கலந்து கொண்டனர் மேலும் கருவம்பாளையம் அறிவு திருக்கோவில் நிர்வாகி முத்துசாமி ஐயா அவர்கள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார்கள் மேலும் மருத்துவர் சங்க நிர்வாகி கே எஸ் அவர்களும் கலந்து கொண்டார்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000